# முதல் பருவத் தொகுத்தறிவுத் தேர்வு

மதிப்பெண்: 60

தமிழ்

வகுப்பு - ஐந்து - ___________ நேரம்: 2மணி

**I. சரியான விடையைத் தேர்வு செய்க:** 10 × 1 = 10

1. பாடல் பாடினாள் - இத்தொடரில் இல்லை ___________
   அ) எழுவாய் ஆ) பயனிலை இ) செயப்படுபொருள் ஈ) செயல்
2. கனியிடை - இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ___________
   அ) கனி + யிடை ஆ) கணி + யிடை இ) கனி + இடை ஈ) கணி + இடை
3. கண் + இமைக்கும் என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல் ___________
   அ) கண்ணிமைக்கும் ஆ) கணிமைக்கும்
   இ) கண்இமைக்கும் ஈ) கண்யிமைக்கும்
4. தற்போது இச்சொல்லுக்குரிய பொருள் ___________
   அ) இப்பொழுது ஆ) பிறகு இ) அப்பொழுது ஈ) காலைப்பொழுது
5. புரவி என்பதன் பொருள் ___________
   அ) குதிரை ஆ) மீன் இ) கடல் ஈ) கண்கள்
6. புலியின் இளமைப்பெயர் ___________
   அ) புலிப்பறழ் ஆ) புலிக்குட்டி இ) புலிக்கன்று ஈ) புலிப்பிள்ளை
7. பொருள் + செல்வம் என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைப்பது ___________
   அ) பொருள்செல்வம் ஆ) பொருள்ச்செல்வம்
   இ) பொருட்செல்வம் ஈ) பொருட்ச்செல்வம்
8. அறிவிலர் என்பதன் எதிர்ச்சொல் ___________
   அ) அறிவில்லாதவர்ஆ) படிக்காதவர் இ) அறியாதவர் ஈ) அறிவுடையர்
9. மழையை வாங்கி தனக்குள் சேமிக்கும் கலன் எது?
   அ) கிணறு ஆ) மண் இ) குடம் ஈ) கடல்
10. யானை ___________
    அ) கத்தும் ஆ) பிளிறும் இ) கூவும் ஈ) அலறும்

**II. வினை மரபுகளை நிரப்புக:** 5 × 1 = 5

11. சலீம் தண்ணீர் ___________
12. டேனியல் பால் ___________
13. கலையரசி சோறு ___________
14. விமலா வடை ___________
15. கண்ணன் மாத்திரை ___________

**III. பொருத்துக:** 5 × 1 = 5

16. உறுமீன் - நீர் பாயும் வழி
17. கருதவும் - பணிவு
18. அறிவிலர் - நினைக்கவும்
19. மடைத்தலை - பெரிய மீன்
20. அடக்கம் - அறிவு இல்லாதவர்

**IV. தமிழின் இனிமை பாடலில் முதல் எழுத்து ஒன்று போல் உள்ள சொற்களை எடுத்து எழுதுக:** 1 × 5 = 5

21.

| கனியிடை | கழையிடை |
|---|---|
| | |
| | |
| | |

**V. புதிய சொற்களை உருவாக்குக:** 3 × 2 = 6

22. பாடப்புத்தகம்
23. பள்ளிக்கூடம்
24. மணிமேகலை

**VI. எவையேனும் ஏழு வினாக்களுக்கு மட்டும் விடையளி:** 7 × 2 = 14

25. பழமொழி என்பது யாது?
26. ஏதேனும் ஐந்து மரபுச் சொற்களைத் தொடரில் அமைத்து எழுதுக.
27. பாரதிதாசன் எதனை என் உயிர் என்று கூறுகிறார்?
28. நரி, மானை எங்கு அழைத்துச் சென்றது?
29. கொக்கு எதற்காகக் காத்திருக்கிறது?
30. மூன்று புதிர்களுக்கு விடையளித்தவர் யார்?
31. களர்நிலத்துக்கு ஒப்பாவர் யார்?
32. அரசருக்கு ஏற்பட்ட ஆவல் என்ன?

**VII. சொற்களைக் கொண்டு, ஐந்து புதிய தொடர்களை உருவாக்குக:** 5 × 1 = 5

33.

| | | | | |
|---|---|---|---|---|
| தேவி | படித்தாள் | பாடம் | வீட்டிற்கு | நான் |
| படித்தேன் | சென்றேன் | சென்றாள் | பள்ளிக்கு | வந்தாள் |

**VIII. கடிதம் எழுதுக:** 1 × 5 = 5

34. குடிநீர் வேண்டி விண்ணப்பம் வரைக.

**IX. சொற்றொடரில் அமைத்து எழுதுக:** 5 × 1 = 5

35. குழந்தைகள்
36. தமிழ்நாடு
37. கணினி
38. வேட்டை
39. பாடுபட்டு